DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of Judicial Fast Track Magistrate, Srivilliputtur.

STC.No. 211-2025

Deposition of Witness for P.W.2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | ஆனந்தசேகர் | **தாலுகா** | : | |
| **த.பெ.** | : | ஜோசப் செல்வராஜ் | **தொழில்** | : | |
| **ஊர்** | : | | **வயது** | : | |

Solemenly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of the day of 02.02.2026

புகார்தாரர் ஆஜர். எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் சிட்டி யூனியன் வங்கி, ஸ்ரீவில்லிபுத்தூர் கிளை மேலாளராக பணிபுரிகிறேன். இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு நீதிமன்ற அழைப்பாணை வந்தது. சூசைமரியான் எங்கள் வங்கியில் பராமரித்துவரும் நடப்பு கணக்கு எண்.510909010028003 ஆகும். என்னிடம் காட்டப்படும் கரூர் வைசியா வங்கி, திருவில்லிபுத்தூர் கிளை வங்கி கணக்கு எண்.1804172000000400-ல் வழங்கப்பட்ட காசோலை எண்.000131 என் வங்கியில் சூசைமரியான் மேற்படி அவரது வங்கி கணக்கில் 20.06.2024 அன்று வசூலுக்கு தாக்கல் செய்தார் என்றால் சரி. அந்த காசோலை வழங்கிய நபர் வங்கி கணக்கில் போதிய இருப்பு இல்லை என திருப்பப்பட்டதாக கடந்த 21.06.2024 அன்று எங்கள் வங்கியால் ஒரு குறிப்பாணை வழங்கப்பட்டது என்றால் சரி.

சூசைமரியான் வங்கி கணக்கு பட்டியல் 15.06.2024 முதல் 25.06.2024 வரைக்கானதை தாக்கல் செய்கிறேன். அது **சா.சா.ஆ.1** ஆகும். சா.சா.ஆ.1 கணக்கு பட்டியலில் மேற்சொன்ன 000131 காசோலை திருப்பப்பட்டதாக குறிப்புஉள்ளது. சாட்சியிடம் 21.06.2024 அன்று திருப்பபட்டதாக குறிப்பில் உள்ள காசோலை காட்டப்பட்டு சாட்சி ஆம் என ஒப்புக் கொண்டதால் காசோலை எண்.000131 **சா.சா.ஆ.2** ஆகவும், அது குறித்து சாட்சியின் வங்கியால் வழங்கப்பட்ட 21.06.2024 அன்று காசோலை திருப்புதல் குறிப்பாணை **சா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை :**

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணைக்கு வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணைக்கு முன் வராததால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

For CITY UNION BANK LTD.

[signature]

Manager, Srivilliputhur

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

[signature] 2/2/26

நீதித்துறை விரைவு நடுவர்
திருவில்லிபுத்தூர்.